# யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்ட அறிக்கை – 13.08.2018
# பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

மேற்படி கூட்டமானது 13.08.2018 ம் திகதி திங்கட்கிழமை மு..ப 9.50 மணிக்கு யாழ் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரான கௌரவ மாவை சேனாதிராஜா(பா.உ) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. கூட்டத்திற்கு சமூகமளித்தோர் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் தனது வரவேற்புரையில் அனைவரையும் வரவேற்று இன்றைய ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இந்த வருடத்தின் மூன்றாவது கூட்டம் எனவும் முதலில் சென்ற கூட்டத்தின் பின் கிடைக்கப்பெற்ற திட்டங்களுக்கான அனுமதி பெறப்படவுள்ளளதாகவும் வருடத்தின் அரையாண்டு கடந்த பின்னரே திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதனால் விரைவாக மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் மழைகாலத்திற்கு முன் வேலைகள் நிறைவுறுத்தப்படவேண்டுமெனவும் இதற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் கேட்டுக்கொண்டு யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரான கௌரவ மாவை சேனாதிராஜா(பா.உ) அவர்களை கூட்டத்தினை தொடர்ந்து நடாத்துமாறு பிரதேச செயலாளர் தயவுடன் கேட்டுக்கொண்டார்.

கௌரவ மாவை சேனாதிராஜா(பா.உ) அவர்கள் அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் மாநகர முதல்வரையும் மாகாணசபை உறுப்பினர்களையும் மாநகரசபை உறுப்பினர்களையும் திணைக்கள தலைவர்களையும் மற்றும் சமூக மட்ட தலைவர்களையும் வரவேற்றதுடன் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் இப்பிரதேசம் நகரத்தை மையமாகக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருக்கின்றது. நகரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் பலவழிகளில் செயற்பட்டு வருகின்றது. இதனை ஒருங்கிணைக்கும் பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது என குறிப்பிட்டார்.

சென்ற வரவு செலவத்திட்டத்தின் பின் அதிமேதகு ஜனாதிபதி கௌரவ பிரதம அமைச்சர் கௌரவ நிதி அமைச்சர் ஆகியோருடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடாத்தி போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் போதாமையாக இருப்பதனை தெளிவுபடுத்தியுள்ளோம். பாராளுமன்ற அவைக்குழுவின் தலைவராக நான் இருக்கின்றேன். பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் நான்கு அமைச்சுக்களின் செயலாளர்களும பங்குபற்றியிருந்தனர். இக்குழுக்கூட்டத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்கள் நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டு 16 திட்டங்கள் வடகிழக்கு மாகாணத்துக்கு என்று நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. இதில்

1. 50000 வீடுகள் வழங்குவதற்காக 750 மில்லியன் ரூபாவும்
2. முன்னாள் போராளிகள் 12000 பேரினை ஜனாநாயக நீரோட்டத்தில் இணைக்கும் நோக்குடன் 3 தலைப்புக்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
3. 90000 பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு 2750 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முன்னால் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையிலான தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்திற்கு 1000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சில் எடுத்த முடிவின்படி நுண்கடன் பெற்றுக்கொண்டவர்களுக்கு 100,000.00 ரூபாவிற்கு உட்பட்ட கடன்கள் ரத்துச்செய்யப்பட்டு அரசாங்கத்தினால் இக்கடன்கள் செலுத்தபபடும். வரவு செலவுத்திட்டத்தில் 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான வீடுகள் கட்டிக்கொடுக்கவுள்ளோம். இவ்வீடுகள் கட்டிக்கொடுப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டள்ளது. ஆனால் அவை விரைவில் சீர்செய்யப்படும்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்வாதாரமற்றவர்களாகவும் பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாடுடையவர்களாகவும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாத பெற்றோர்களாகவும் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கேற்ற வகையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பொறுப்பு உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது அரசினால் கம்பரிலியா, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், இலங்கையின் முயற்சியாண்மை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையின் முயற்சியாண்மை திட்டத்தில் கடன்களை குறைந்த வட்டி வீதத்தில் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் மானியங்களும் வழங்கப்படுகின்றன. பட்டதாரிகளுக்கு 1.5 மில்லியன் ரூபா கடன்கள் வட்டியில்லாது வழங்கப்படும். பிரதேச செயலகங்கள் அதற்கான தெளிவைப்பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும். இத்திட்டங்கள் தொடர்பாக அனைத்து தரப்பினரும் மக்களுக்கு தெளிவுபடுத்தலையும் வழிகாட்டுதல்களையும் வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

கடந்த கூட்ட அறிக்கை தொடர்பாக ஏதாவது திருத்தங்கள் இருப்பின் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டது. திருத்தங்கள் சுட்டிக்காட்டப்படாததனால் வடமாகாணசபையின் அவைத்தலைவர் கௌரவ கந்தையா சிவஞானம் அவர்களால் வழிமொழியப்பட்டு கடந்த கூட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. கௌரவ மாநகரசபை உறுப்பினர்கள் தமக்கு கூட்ட அறிக்கைகள் கிடைக்கவில்லை என தெரிவித்தனர். பிரதேச செயலக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக அழைப்புக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும்

உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியினை தரும் பட்சத்தில் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் அவர்களால் தனது நிதிஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட திட்டங்களில் ஒருசிலவே கடந்த கூட்ட அறிக்கையில் காணப்படுவதாக தெரிவித்ததற்கு உதவித்திட்டமிடல் பணிப்பாளரினால் சென்ற கூட்டத்தின் பின்னரே நிதிஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதனால் இன்றைய ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் உதவித்திட்டமிடல் பணிப்பாளரினால் 2018 ஆம் ஆண்டுக்கு நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டன. அவை வருமாறு.

| **இல** | **வேலை விபரம்** | **கி,அ.பி** | **நடைமுறைப்படுத்தும் நிறுவனம்** | **நிதி மூலம்** | **மதிப்பீடு மில்லியனில்** |
|---|---|---|---|---|---|
| 1 | மலசலகூடம் அமைத்தல் வசந்தபுரம் - 50 கிடைக்கப்பெற்று அனுமதி பெறப்பட்டது. வீட்டுதிட்டத்துடன் மலசலகூடம் வழங்கப்படும் என்பதனால் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. சாதாரண மலசலகூடம் - 30 விசேட தேவையுடையவர்களுக்கானது – 4 | J/61–J/ 88 | பிரதேச செயலகம் | மீள்குடியேற்றம் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு | 3.291 |
| 2 | நீண்டகால இடம்பெயர்வுக்குட்பட்ட மக்களுக்கான (Protected IDPs) வீடமைப்பத் திட்டம் (22 பயனாளிகளுக்கு) | J/86,J/87 & J/88 | பிரதேச செயலகம் | மீள்குடியேற்றம் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு | 176.000 |

- **Decentralized Capital Budget Programme - 2018**

| S.No | Name Of the Project | Hon. MP 'S Name | G.S Division | Allocation Amount | | Capital Amount |
|---|---|---|---|---|---|---|
| | | | | Construction | Supply | |
| 1 | Repairing of Roof at Jaffna Jaipur Centre for Disability Rehabilitation. | Hon.Shanthi Sriskantharajah | J/66 | 150,000.00 | | 145,500.00 |
| 2 | Completion of Building for Paassaiyoor St. Antony's Peoples Development Community Centre | Sumanthiran | J/64 | 750,000.00 | | 727,500.00 |
| 3 | Supply of equipment / furniture for Jaffna District Thrift Co-operative Society Union | Hon.Mavai. Somasundaram Senathirajah | J/81 | | 125,000.00 | 125,000.00 |
| 4 | Infrastructure Development for Jaffna Chundikuli Punitha Thirumulukku Yovan Aalayam | Hon.Mavai. Somasundaram Senathirajah | J/76 | 200,000.00 | | 194,000.00 |
| 5 | Infrastructure Development for Green Field Community Center | Hon.Mavai. Somasundaram Senathirajah | J/75 | 200,000.00 | | 194,000.00 |
| 6 | Supply of licence for Jaffna D.S Area | Hon.Eeswarapatham Saravanabavan | - | | 24,000.00 | 24,000.00 |
| 7 | Development works for Gurunagar Flats Community Center Kalaiyarankam | Douglas Devananda, | J/68 | 200,000.00 | - | 194,000.00 |
| 8 | Electricity supply for Mooventhar Sarvodaya Siramadana Sangam | Douglas Devananda, | J/81 | - | 60,000.00 | 60,000.00 |
| 9 | Supply of Sports Equipment for Palar Kalvi Kazhakam | Douglas Devananda, | J/79 | - | 50,000.00 | 50,000.00 |
| 10 | Water Supply and Pipe Fixing for St. Rocks Community Center | Douglas Devananda, | J/68 | - | 25,000.00 | 25,000.00 |
| 11 | Supply of Furniture for Aariyakulam Mutpokku Valipar Kazhakam Padipakam | Douglas Devananda, | J/78 | - | 50,000.00 | 50,000.00 |
| 12 | Electricity connection works for St. Neekilas Youth Society | Douglas Devananda, | J/84 | - | 30,000.00 | 30,000.00 |
| 13 | Supply of Sports Equipment for St. Neekilas Community Center | Douglas Devananda, | J/84 | - | 25,000.00 | 25,000.00 |
| 14 | Supply of Furniture for Kannapuram Women Rural Development Society | Douglas Devananda, | J/84 | - | 25,000.00 | 25,000.00 |
| 15 | Supply of Sports Equipment for Kalaivani Community Center | Douglas Devananda, | J/84 | - | 20,000.00 | 20,000.00 |
| 16 | Supply of Furniture for Vannarpannai Women Rural Development Society | Douglas Devananda, | J/82 | - | 40,000.00 | 40,000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | Construction of Boundary Wall for Colombuthurai Vasanthapuram Hindu Cemetery | Douglas Devananda, | J/61 | 100,000.00 | - | 97,000.00 |
| 18 | Renovation of Kalaiyarangam for Ilankathir Community Center | Douglas Devananda, | J/77 | 100,000.00 | - | 97,000.00 |
| 19 | Renovation of Building for Paasaiyoor St. Anthoniyar Fisheries Society | Douglas Devananda, | J/64 | 100,000.00 | - | 97,000.00 |
| 20 | Electricity connection for Kannapuram Community Center | Douglas Devananda, | J/84 | - | 20,000.00 | 20,000.00 |
| 21 | Supply of Multimedia Projector for young Christian Society | Sivagnanam Shritharan | J/76 | | 100,000.00 | 100,000.00 |
| | **Total** | | | **1,800,000.00** | **594,000.00** | **2,340,000.00** |

- **துரித கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018**
  **CAMPERALIYA - Rapid Rural Development Programme (RRDP) -2018**

இத்திட்டத்தின் கீழ் 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் - 147

- **கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் - 2018**

| S.N | Name of the Project | Source of fund | Location G.N.Div | Implementing Agency | Allocation |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of Colombuthurai west WRDS building | PSDG | J/63 | Dept. of Rural Development - NP | 1.70 Mn |
| 2 | Supply of Furniture - Vannarpannai WRDS | CBG Hon.R.Jeyasekaram | J/82 | Dept. of Rural Development - NP | 0.05mn |
| 3 | J/Pasaiyoor WRDS - Sawing Machin | CBG Hon.R.Jeyasekaram | J/64 | Dept. of Rural Development - NP | 35,000.00 |
| 4 | J/Kannapuram WRDS - Sawing Machin | CBG Hon.R.Jeyasekaram | J/87 | Dept. of Rural Development - NP | 27,500.00 |
| 5 | J/Vasanthapuram WRDS - Electricity facility | CBG Hon.R.Jeyasekaram | J/61 | Dept. of Rural Development - NP | 20,769.00 |
| 6 | J/Valanpuram WRDS -Supply of Chairs | CBG Hon.R.Jeyasekaram | J/62 | Dept. of Rural Development - NP | 25,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | J/Colomputhurai st.mary's WRDS -Supply of Chairs | CBG Hon.R.Jeyasekaram | J/87 | Dept. of Rural Development - NP | 20,000.00 |
| 8 | Supply of Tailaring Materials of Women Headed Family - Moorstreet North - | CBG Hon. Ayoob Asmin | J/87 | Dept. of Rural Development - NP | 100,000.00 |

- **பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - 2018**

| S.N | Name of the Project | Source of fund | Location G.N.Div | Allocation |
|---|---|---|---|---|
| 1 | துறைசார் உபகரணங்கள் வழங்குதல் யாழ் ஊடக கலை கலாச்சார அமையம் - கௌரவ சீ.வீ.கே சிவஞானம் | CBG கௌரவ சீ.வீ.கே சிவஞானம் | J/78 | 50,000.00 |
| 2 | ஓகன் இசைக்கருவி- பிறேமச்சந்திரன் சசீபன் யா பரியோவான் கல்லூரி | CBG கௌரவ பசுபதி அரியரட்ணம் | J/75 | 78,000.00 |
| 3 | ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்குதல் - வண்ணை மகமாரியம்மன் தேவஸ்தானம் | CBG கௌரவ வ.கமலேஸ்வரன் | J/82 | 40,000.00 |
| 4 | கட்டட புனரமைப்ப - திருக்கேதீஸ்சர அகில இலங்கை விஸ்வகுல மடம் - பரிபாலன சபை யாழ்ப்பாணம். | CBG கௌரவ க.தர்மலிங்கம் | J/82 | 100,000.00 |
| 5 | ஊடக சாதனங்கள் வழங்குதல் - யாழ் ஊடக அமையம் | CBG கௌரவ வே.சிவயோகன் | J/78 | 100,000.00 |
| 6 | யாழ்ப்பாண பிரதேச கலாச்சார பேரவை - தமிழ் இன்னியத்திற்குரிய இசைக்கருவிகள் வழங்குதல் | CBG கௌரவ அயூப் அஸ்மின் | J/76 | 100,000.00 |
| 7 | யாழ் முஸ்லீம் லீக் வாலிப முண்ணனி அமைப்பிற்கான கதிரைகள் மற்றும் அலுவலக தளபாடங்கள் வழங்குதல் | CBG கௌரவ அயூப் அஸ்மின் | J/87 | 75,000.00 |
| 8 | சோனகத்தெரு யாழ்ப்பாணம்ஆலய கலாச்சார மண்டப புனரமைப்பு - பரிசுத்த கார்மேல் மாதா ஆலயம் பங்சால் வீதி குருநகர் | CBG கௌரவ இ.ஜெயசேகரம் | J/70 | 75,000.00 |
| 9 | ஆலய புனருத்தாரணத்துக்கான ஒயில் பெயின்ற் வழங்குதல். அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானம் கொழும்புத்துறை வீதி பாண்டியன்தாழ்வு. | கௌரவ பொ.ஜங்கரநேசன் | | 50,000.00 |
| 10 | தளபாடங்கள் மற்றும் கணணி வழங்குதல் யாழ் அடைக்கல அன்னை தேவாலயம். (முடுசு) | கௌரவ என்.விந்தன் கனகரத்தினம். | | 200,000.00 |
| 11 | புனருத்தாரண வேலைகள் அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானம் கொழும்புத்துறை வீதி பாண்டியன்தாழ்வு. | கௌரவ என்.விந்தன் கனகரத்தினம். | | 75,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | துறைசார் ஆடைகள் பொருட்கள் வழங்குதல் - தொன்மம் கலைக்குழு, 140 பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம். | கௌரவ சி.தவராசா | | 75,000.00 |
| 13 | புனரமைப்பு அருள்மிகு மருதடி எழும் பிள்ளையார் தேவஸ்தானம் றக்கா வீதி சுண்டிக்குளி | கௌரவ இ.ஜெயசேகரம் | | 100,000.00 |
| 14 | மணிக்கூட்டுக்கோபுரம் அமைத்தல் - ஞானவைரவர் ஆலயம் மூலாய் வீதி, சுண்டிக்குளி | கௌரவ இ.ஜெயசேகரம் | | 54,500.00 |
| 15 | அபிவிருத்தி வேலைகள் அகில இலங்கை விஸ்வகா்மகுலசங்கம் - 213∴1இ கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | கௌரவ எம்.கே.சிவாஜிலிங்கம். | | 75,000.00 |
| 16 | கற்பக விநாயகர் ஆலயம் கச்சேரி நல்லூர் யாழ்ப்பாணம்.- ஒலிபெருக்கி உபகரணங்கள் வழங்குதல் | கௌரவ ச.சுகிர்தன் | | 50,000.00 |
| 17 | கொழும்புத்துறை ஆா்த்திபுலம் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம் திருப்பணி வேலைகள் | கௌரவ அமைச்சா் அனந்தி சசிதரன் | | 75000 |

- **சமூக சேவைத்திணைக்களம்**

வடக்குமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் அவர்களுடைய 2018 ஆம் ஆண்டுக்கான நிதிஒதுக்கீட்டின் கீழ் சமையல் உபகரணம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் - 64

வடக்குமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் அவர்களுடைய 2018 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ் மாவட்டத்தில் துவிச்சக்கரவண்டி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் - 17

**இவ் வேலைத்திட்டங்களுக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது.**

கௌரவ வடமாகாணசபை உறுப்பினா் ஜெயசேகரம் அவா்களால் பண்ணையில் உள்ள சிறைச்சாலையில் தொடா்ந்து கட்டடங்கள் கட்டப்படுவதாகவும் கோப்பாயில் சிறைச்சாலைக்கென ஒதுக்கப்பட்ட 90 ஏக்கா் காணியில் 20 ஏக்கரில் இராணுவமுகாம் அமைந்துள்ளதாகவும் மிகுதி 70 ஏக்கா் காணியில் புதிய சிறைச்சாலை கட்டடங்களை அமைக்கலாம் எனவும் இதுதொடா்பாக பல கூட்டங்களில் தீா்மானங்கள் எடுக்கப்பட்டும் சிறைச்சாலையை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது புதிய கட்டடங்கள் நிா்மாணிக்கப்படுவதாக தெரித்தாா்.

இவ்விடயம் தொடா்பாக கௌரவ யாழ் மாநகரசபை மேஜா் அவா்களால் சிறைச்சாலை கட்டுவதற்கு நகர அபிவருத்தி அதிகார சபையினால் அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்தாா். தாம் பல்வேறு கூட்டங்களில் தீா்மானம் எடுத்து உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்தாா்.

கௌரவ இணைத்தலைவா் அவா்களால் சிறைச்சாலை உதவி அத்தியட்சகரிடம் என்ன கட்டடங்கள் கட்டப்படுகிறது என கேள்வி கேட்ட போது சிறைக்கூடங்களும் முன் பக்கத்தில் உத்தியோகத்தர் விடுதியும் மலசல சுத்திகரிப்பு திட்டத்திற்கான கட்டடங்களும் கட்டப்படுவதாக தெரிவித்தார். இக்கட்டடங்கள் கட்டுவதற்கான ஆட்சேபனைகள் பல மாகாணசபை உறுப்பினா்களால் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கருத்து தெரிவிக்கையில் சிறைச்சாலை முன்னா் இருந்த ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டதாகவும் மீள்குடியேற்ற அமைச்சா் கௌரவ சுவாமிநாதன் அவா்களால் திறந்து வைக்கப்பட்டதாகவும் தற்போது சிறைச்சாலைகள் நீதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் கௌாரவ நீதி அமைச்சா் தலதா அத்தக்கோரள அவா்களால் சிறைச்சாலை கட்டடத்துக்கான அனுமதி பெறப்படவில்லை எனவும் அனுமதியினை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு வழங்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடா்பாக பிரதேச செயலாளா் குறிப்படுகையில் ஒவ்வொரு ஒருங்கிணைப்புககுழுக் கூட்டத்திலும் இவ்விடயம் கதைக்கப்படுவதாகவும் சிறைச்சாலையினை மாற்றுவது தொடா்பாக கொள்கை ரீதியான தீா்மானம் எடுக்கப்படவேண்டுமெனவும் இங்குள்ள மலக்கழிவுகள் கடலுக்குள் நேரடியாக அனுப்பப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

கௌரவ இணைத்தலைவா் மாவை சேனாதிராசா அவா்கள் சிறைச்சாலையில் கட்டடங்கள் கட்டுவது நிறுத்தப்படவேண்டுமெனவும் இவ்விடயம் தொடா்பாக தாம் நீதி அமைச்சுடன் கலந்துரையாடுவதாக தெரிவித்ததுடன் மாநகரசபை தீா்மானம் எடுத்து சட்டநடவடிக்கை தொடருமாறு யாழ்மாநகரசபை ஆணையாளருக்கு பணிப்புரை வழங்கினார்.

கௌரவ இணைத்தலைவா் மாவை சேனாதிராசா அவா்கள் அரசாங்கத்தினால் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் கம்பரிலியா திட்டம் 3 வருட திட்டமாகும். இதற்கான திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து மீள வழங்க வேண்டுமென அனைவரையும் கேட்டுக்கொண்டார். தாம் பிரதம அமைச்சருடனும் நிதி அமைச்சருடனும் கலந்துரையாடுவதாக தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் புனா்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 72 பேரும் காணாமல் ஆக்கப்பட்டோா் 225 பேரும் உள்ளனா். கடந்த வரவு செலவுத்திட்டத்தில் இவா்களுக்கு நிதிஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னாள் போராளிகளில் 14 பேர் மட்டும் தான் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்கின்றனா்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் அதிகவனம் ஈர்க்கப்பட்டு சனாதிபதி செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்துகின்ற 10 நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

**அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டம்**

- தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்
- தேசிய போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்
- தேசிய சிறுநீரக நோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்
- பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்
- அங்கவீன நபர்கள் மற்றும் முதியோர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்

**பேண்தகு அபிவிருத்திநிகழ்ச்சித் திட்டம்**

- கிராம சக்தி மக்கள் இயக்கம்
- தேசிய உணவுற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்
- சிறிய அளவிலான விவசாய வியாபார பங்கேற்பு செயற்றிட்டம்

**கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வு பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பிரதான செயற்றிட்டம்**

- போஷாக்கிற்கான பல்துறைசார் செயற்றிட்டம்

**Enterprise Sri Lanka – Government Subsidised Loan Scheme** திட்டத்தின் கீழ் தற்பொழுது அரசினால் இலகு முறையில் குறைந்த வட்டியில் வங்கிகளில் 19 வகையான கடன்களை வழங்கி தொழில் முயற்கியினை ஊக்குவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனை மக்களுக்கு தெரியப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

நுண்நிதிக்கடன் தொடர்பாக ஆரயாயப்பட்டது. இப்பிரதேச செயலக பிரிவில் 32 நுண்நிதிக்கடன் நிறுவனங்கள் இயங்குவதாகவும் இவை கணவனை இழந்த பெண்களை மையமாக வைத்தே கடன்களை வழங்குவதாகவும் இக்கடன்களினை கட்டமுடியாது கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் மாகாணசபை உறுப்பினர்களாலும் மாநகரசபை உறுப்பினர்களாலும் தெரிவிக்கப்பட்டது. இந்நிறுவனங்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் தான் செயற்படுவதாகவும் இங்கு கடன் எடுத்தவர்களில் 60 வீதமானவர்கள் நன்மையடைந்துள்ளதாகவும் கௌரவ மேஜர் அவர்கள் தெரிவித்தார்.

ஒரு இலட்சத்துக்கு குறைவான நுண்கடன்களைப்பெற்று இக்கடனை மீள செலுத்த இயலாதமக்களுடைய கடன்களை அரசாங்கம் மீள செலுத்தவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. மத்திய வங்கியினால் சமர்ப்பித்த பட்டியலில் உள்ளடங்காத நிதிநிறுவனங்களில் கடன்பெற்றோர் விபரம் தொடர்பான பதிவுகள் பிரதேச

செயலகங்கள் ஊடாக மெற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு இலட்சத்துககுள் கடன் பெற்றவர்கள் 4 பேரும் ஒரு இலட்சத்துக்கு மேல் கடன்பெற்றவர்கள் 16 பேரும் பதிவு செய்துள்ளதாகவும் மக்கள் தாம் கடன் பெற்றதை வெளியே சொல்வதற்கு அச்சப்படுவதாகவும் தெரிவிககப்பட்டது. எனவே மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பாக மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

கௌரவ இணைத்தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் தமிழ்தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் அடிப்படையில் ஒரு இலட்சத்துககுள் கடன் பெற்றவர்கள் கடன்னளை செலுத்தமுடியாமல் இருந்தால் அதனை அரசாங்கம் தாங்கள் செலுத்தவதற்கு இணங்கியிருப்பதாக தெரிவித்தார். இதன் போது யாழ் மாநகர முதல்வர் வாழ்வாதார ரிதியாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தங்கள் தேவைகளுக்காக பல வங்கியில் கடன் பெற்றிருப்பார்கள். இதனை நுண்கடன் நிறுவனங்களிடம் கடன்பெறும் போது குறிப்பிடவதில்லை என தெரிவித்தார். இதற்கு பதிலளித்த இணைத்தலைவர் அவர்கள் கூடுதலான இடங்களில் கடன்களை பெற்றவர்கள் தொடர்பாக இந்த இடத்தில் நாங்கள் எதனையும் கூறஇயலாது. அதனை அரசாங்கத்துடன் பேசியதன் பின்னரே கூற இயலும் என குறிப்பட்டார். தொடர்ந்து யாழ் மாநகர முதல்வர் யுத்தம் உள்ளிட்ட பல்வேறு சூழல்களினால் பாதிக்கப்பட்டு குடும்பத்தலைவர்கள் உழைக்கமுடியாத நிலையில் இருப்பவர்கள் அவருடைய குடும்பம் வறுமையில் இருக்கும் அவ்வாறான குடும்பங்களை பெண்தலைமைத்துவ குடும்பங்களாக கணிப்பதில்லை. கணிக்கவும் முடியாது அதனால் அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படாமலேயே உள்ளது. எனவே மக்களுடைய தேவைகளை அறிந்து உதவிகள் செய்யப்பட வேண்டும். இல்லையேல் மக்கள் குடும்ப வறுமையை போக்குவதற்காக கடன்களை பெறவேண்டியுள்ளது என குறிப்பட்டார். தொடர்ந்து இணைத்தலைவர் இவர்கள் வெறுமனே யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடமாகாணம் முழுவதும் இவ்வாறான பிரச்சனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஏனவே இங்கு பேசப்பட்ட இந்த நுண்கடன் தொடர்பான விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து திறைசேரி அதிகாரிகளையும் வைத்து பேசித்தீர்மானங்களை எடுக்கலாம் என தெரிவித்தார்.

கௌரவ மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களால் முஸ்லீம் நபர் ஒருவரினால் தனக்கு வீட்டுத்திட்டம் தரப்படவில்லை என பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் மீது பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டு அவ் உத்தியோகத்தர் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டமை தொடர்பாக பிரதேச செயலாளரிடம் கேள்வி எழுப்பினார். இது தொடர்பாக கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் இவ்வலுவலக உயர் அதிகாரியுடனேயே அவ்வுத்தியோகத்தர் அனுப்பப்பட்டார் என தெரிவித்ததற்கு அமைய உதவித்திட்டமிடல் பணிப்பாளரினால் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் பொலிசாரினால் குற்றவியல் சட்டத்திற்கமைய முறைப்பாடு பதியப்பட்டதாக

பொலிசாரால் தெரிவிக்கப்பட்டதற்கு பொலிசாருக்கு பூரண விளக்கம் வழங்கப்பட்டதற்கமைய பொலிசாா் அரச கடமை தொடா்பாக குற்றவியல் சட்டத்திற்கமைய முறைப்பாடு பதியமுடியாது என்பதை ஏற்றுக்கொண்டதாக தெரிவித்தாா்.

**அத்துமீறல் கட்டடம், மதில்கள், வாய்க்கால்கள் அமைத்தல்** தொடர்பாக இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் கடந்த மாதம் வரை யாழ்ப்பாண பிரதேச செயலக எல்லைக்குள் சுமாா் 90 இற்கு மேற்பட்ட கட்டடங்கள் எந்த அனுமதியும் இல்லாமல் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது எனவும் அந்த தரவுகளின்படி J/68 , J/69 ஆகிய இரு கிராமசேவகா் பிரிவுகளிலேயே அதிகளவான கட்டடங்கள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாக் தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடா்பாக கருத்த தெரிவித்த யாழ் மாநகர முதல்வா் அவா்கள் யாழ்மாநகரசபை எல்லைக்குள் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக்கள் மற்றும் கட்டடங்கள் அகற்றப்படும் எனவும் குறித்த திட்டம் அமுல்படுத்துவதற்கு முன்னா் குறித்த கட்டடங்களில் வாழும் மக்களுக்கு மாற்றுத்திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் எனவும் மாற்றுத்திட்டம் வந்ததன் பின்னா் சகல கட்டடங்களும் அகற்றப்படும் எனவும் குருநகா் மட்டுமல்லாமல் மாநகர எல்லைக்குள் உள்ள சகல கிராமங்களிலும் சட்டத்திற்கு மாறாக கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் அவை தொடா்பாக அந்தந்த கிராமங்களில் வாழும் மாநகரசபை உறுப்பினா்கள் சுட்டிக்காட்டுவதில்லை. காரணம் அவா்களுடைய வாக்கு வங்கி பாதிக்கப்படும் என நினைக்கின்றாா்கள். இவ்வாறு அனுமதி பெறப்படாது கட்டப்பட்ட 23 கட்டடங்கள் தொடா்பாக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தள்ளோம். மக்கள் கட்டட அனுமதிக்காக சென்றால் அங்கே அனுமதி தரமாட்டாா்கள் என நினைக்கின்றாா்கள். ஆனால் அதில் உண்மையில்லை. 3 குழி நிலமாக இருந்தாலும் 4 குழி நிலமாக இருந்தாலும் மக்களுடைய தேவைகளை கருத்தில் கொண்டு நிச்சயமாக அனுமதிகளை வழங்க உச்சபட்ச நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் சட்டவிரோதமாக மக்கள் மட்டும் வீடுகளையும் கட்டடங்களையும் கட்டவில்லை. யாழ்நகரிலுள்ள பாரிய வா்த்தக நிலைய கட்டடங்கள் பல சட்டத்திற்கு மாறாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக எந்த அனுமதியும் பெறப்படவில்லை. இங்கே யாரும் நடிக்கத் தேவையில்லை. மேலும் கரையோரங்களில் கட்டப்பட்டள்ள சட்டவிரோத கட்டடங்கள் நிச்சயமாக அகற்றப்படும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என தெரிவித்தாா்.

காணி சுவீகரிப்பு தொடா்பாக தெரிவிக்கையில்

J/85 நாவாந்துறை வடக்கில் இராஜாளிகுளக்கரை (சாபிநகா்) இல் 4 ஏக்கா் காணி NHDA க்கு என சுவீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. எனினும் இது பிரிவு 9வரை நடைபெற்று நிறுத்தப்பட்டுள்ளது. இச்சுவீகரிப்பினை தொடா்ந்து நடத்துவதா அல்லது இச்சுவீகரிப்பினை NHDA கைவிட விரும்பின் அதற்கான எழுத்துமூல அனுமதியை

வழங்கவும். பிரிவு 39 (1) இன் கீழ் இரத்து செய்வதற்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

J/85 நாவாந்துறை வடக்கில் நித்திய ஒளி கிராமத்தில் காணி சுவீகரிப்பு section- 4 நிறைவடைந்துள்ளது. Section 38 (A) வேண்டுகோள் காணி அமைச்சுக்கு சமா்ப்பிக்கப்பட்டு தற்போது Section 38 (A) கிடைக்கப்பெற்றுள்ளது.

J/61 கிராம அலுவலா் பிரிவில் நெடுங்குளம் கிராமத்தில் அண்ணளவாக 3,000 பேச் காணி கிராம விஸ்தரிப்புக்காக காணி சுவீகரிப்பு Section 2 கிடைக்கப்பெற்றுள்ளது.

காணி அற்றவா்களின் நிலை தொடா்பாக ஆராயப்பட்டது. இவா்களுக்கு அடுக்குமாடிக்குடியிருப்புக்கள் அமைத்து வழங்கப்படவேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கு நீா் விநியோகம் மற்றும் கழிவகற்றல் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் மாநகர சபையில் இதற்கு அடுத்துவரும் வருடங்களில் உலக வங்கி அபிவிருத்தித்திட்டத்தில் வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபை உறுப்பினா்களினால் பிரதான வீதி மற்றும் வைத்தியசாலை வீதியில் தென்னிலங்கை வாகனங்களும் பாரவூா்திகளும் வேகமாக செல்வதாகவும் சுண்டிக்குழி சந்தி ,பஸ்ரியன் சந்தி ஆகிய இடங்களில் வீதிச்சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படவேண்டுமென கோரப்பட்டது. வைத்தியசாலை விதியில் பாரவூா்திகள் பகல் வேளைகளில் செல்வதற்கு பொலிசாா் சரியான முறையில் சட்டத்தை செயற்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

புகையிரதக்கடவைகள் புங்கன்குளம், இலந்தைக்குளம், நெடுங்களம் ஆகிய இடங்களில் அமைக்கப்படவேண்டுமென கோரிக்கை விடப்பட்டது.

குளங்கள் புனரமைப்பு தொடா்பாக கலந்துரையாடப்பட்டது. 33 குளங்கள் உலக வங்கியினால் புனரமைக்கப்படவுள்ளதாகவும் இதன்பின் புனரமைக்கப்ப்படாதிருககும் குளங்கள் தொடா்பாக கதைக்கப்படவேண்டுமென மாகாணசபை உறுப்பினா் கௌரவ ஜெயசேகரம் அவா்களினால் தெரிவிக்கப்பட்டது.

பாசையூா;(J/64) கடற்தொழிலாளா் சங்கத்தினால் இடிதாங்கி அமைப்பதற்கான மதிப்பீட்டறிக்கை தருமாறு கோரப்பட்டது. இதற்கு இணைத்தலைவா் அவா்கள் இடிதாங்கி அமைப்பது தொடா்பாக விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இவ்விடயம் ஆராயப்படலாம் என தெரிவித்தாா்.

மேலும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும்.

| தொ.இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானங்கள் | பொறுப்பு உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| 1 | Enterprise Sri Lanka – Government Subsidised Loan Scheme | இலங்கை வங்கியினால் இலங்கையின் முயற்சியாண்மை தொடர்பாக வழங்கப்படும் கடன் திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துதல் | மக்கள் பிரதிநிதிகள் |
| 2 | யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் | யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கட்டடங்கள் கட்டப்படுவதை நிறுத்துவதுடன் சட்டநடவடிக்கை தொடருதல் | ஆணையாளர், யாழ் மாநகர சபை. |
| 3 | யாழ்ப்பாண பிரதேசத்தில் நுண்கடன் பெற்றவர்களின் கடன்களை அரசாங்கம் செலுத்துதல். | நுண்கடன் பெற்றவர்களின் கடன்களை அரசாங்கம் செலுத்துவதுதொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துதல் | மக்கள் பிரதிநிதிகள் |
| 4 | அத்துமீறல் கட்டடம், மதில்கள், வாய்க்கால்கள் அமைத்தல் | ஜனவரி மாதம் முதல் கடந்த மாதம் வரை யாழ்ப்பாண பிரதேச செயலக எல்லைக்குள் சுமார் 90 இற்கு மேற்பட்ட கட்டடங்கள் எந்த அனுமதியும் இல்லாமல் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது.சட்டவிதோதமாக கட்டடங்கள் அமைக்கப்படுவதனை தடுப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. | ஆணையாளர், யாழ் மாநகர சபை. |
| 5 | வீதி சமிக்ஞை விளக்கு பொருத்துதல் | பிரதான வீதி மற்றும் வைத்தியசாலை வீதியில் தென்னிலங்கை வாகனங்களும் பாரவூர்திகளும் வேகமாக செல்வதாகவும் சுண்டிக்குழி சந்தி ,பஸ்ரியன் சந்தி ஆகிய இடங்களில் வீதிச்சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படவேண்டுமென கோரப்பட்டது. | நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| 6 | வைத்தியசாலை விதியில் பாரவூர்திகள் பகல் வேளைகளில் செல்லுதல் | வைத்தியசாலை விதியில் பாரவூர்திகள் பகல் வேளைகளில் செல்வதற்கு பொலிசார் சரியான முறையில் சட்டத்தை செயற்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. | உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம். |

| | | | |
|---|---|---|---|
| 7 | புகையிரதக்கடவை அமைத்தல் | புகையிரதக்கடவைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதனால் புங்கன்குளம், இலந்தைக்குளம், நெடுங்களம் ஆகிய இடங்களில் புகையிரதக்கடவைகள் அமைக்கப்படவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. | புகையிரதத் திணைக்களம், யாழ்ப்பாணம் |

இணைத்தலைவர் அவர்களால் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் பி.ப 1.50 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.

இணைத் தலைவர்கள்

யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக்குழு.

பிரதேச செயலர்,

பிரதேச செயலகம்,

யாழ்ப்பாணம்.

PONNAMPALAM THAYANANTHAN
Divisional Secretary
Divisional Secretariat
Jaffna

.